ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අති විශෙෂ அதிவிசேஷமானது

අංක 1775/1 - 2012 සැප්තැම්බර් 10 වැනි සඳුදා - 2012.09.10
*1775/1 ஆம் இலக்கம் - 2012 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 10 ஆந் திகதி திங்கட்கிழமை*

(அரசின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி III - காணிகள்

## காணி கொள்வனவு பற்றிய அறிவித்தல்கள்

### காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)

7 ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

எனது குறிப்பு இல. : *3/2/1/132.*

ஒரு பகிரங்கத் தேவைக்கு வேண்டியதான கீழ்க்காணும் காணியை எடுத்துக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார்கள் என்பதை காணி எடுத்தற் சட்டத்தின் (அத்தியாயம் 460) 7 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் கீழ் நான் இத்தால் அறிவிக்கின்றேன்.

எடுத்துக்கொள்ளவிருக்கும் காணியின் விபரம் :

மேல் மாகாணத்தில், கம்பஹா மாவட்டத்தில், தாசிய பற்று சிறு பிரிவில், மினுவன்கொடை பிரதேச செயலாளர் பிரிவில் அமைந்துள்ள 101 ஆம் இலக்க வடுமுள்ள கிராம அதிகாரி பிரிவில், வடுமுள்ள கிராமத்தில் கம்பஹா சிரேஷ்ட நில அளவை அதிகாரியினால் தயாரிக்கப்பட்ட இல. கம். 3848 உம் 2012.06.28 ஆந் திகதியும் கொண்ட முதற்சுவட்டு வரைபடத்தில் காட்டப்பட்டுள்ள காணித் துண்டின் விபரம் பின்வருமாறு :

**துண்டு இல. 01**
காணியின் பெயர் : நாவின்னவத்தை ; விபரம் : வீட்டுத் தோட்டம் ; உரிமை கோருபவர் : டெக்லா அயிரின் சன்ரலேகா, இல. 01, வடுமுள்ள, தெவலபொல ; விஸ்தீரணம் : 0.0734 ஹெக்டயார்.

மேற்குறித்த காணிக்கு உரித்துப்பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது முறைப்படி எழுத்தில் அதிகாரம் அளிக்கப்பட்ட காரியக்காரர் மூலமாக 2012 ஆம் வருடம் ஒற்றோபர் மாதம் 30 ஆந் திகதி மு. ப. 10.00 மணிக்கு மினுவன்கொடை பிரதேச செயலகத்தில் என்முன்பாக வெளிப்படுத்தும்படியும் அக்காணியில் அவர்களுக்குள்ள உடந்தைகளின் தன்மையையும் குறித்த காணியை எடுத்தற்கான நஷ்டஈடு பற்றிய அவர்களின் கோரிக்கைகளின் விபரங்களையும், நஷ்டஈட்டுத் தொகையையும், அத்தொகை கணிக்கப்பட்ட விபரங்களையும் 2012 ஆம் வருடம் செத்தெம்பர் மாதம் 20 ஆந் திகதிக்கு முன்னர் எழுத்தில் இரு பிரதிகளாக எனக்கு அறிவிக்கும்படியும் இத்தால் கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

எம். எல். கம்மம்பில,
பிரதேச செயலாளர்,
மினுவன்கொடை.

பிரதேச செயலகம்,
மினுவன்கொடை,
2012.08.22.

09 - 707

---

### காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)

7 ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

எனது இல. : 1/5/சுவீ/233.
உமது இல. : 3/ஜே/82/ஐஆர்/124.

மளத்தவ குளத்திற்காக கீழ்க்காணும் காணியை எடுத்துக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார்கள் என்பதை காணி எடுத்தற் சட்டத்தின் (அத்தியாயம் 460) 7 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் கீழ் நான் இத்தால் அறிவிக்கின்றேன்.

எடுத்துக்கொள்ளவிருக்கும் காணியின் விபரம் :

வட மேல் மாகாணத்தில், குருணாகல் மாவட்டத்தில், பிங்கிரிய பிரதேச செயலாளர் பிரிவில், கினியம கோரளையில், பகல மளத்தவ கிராமத்தில் அமைந்துள்ள இ. கி. வ. 1435, பிற்சேர்க்கை இல. 02 இல் குறிப்பிடப்பட்டுள்ள காணித் துண்டுகள் மூன்றின் (3) விபரங்கள் பின்வருமாறு :

**துண்டு இல. 19**
காணியின் பெயர் : மளத்தவ வத்த ; விபரம் : 30-40 வயதான தென்னை மரங்கள் 03 காணப்படுகின்றன ; உரிமை கோருபவர் : ஜோசப், “த கிரிசான்”, பமுனுகம, ஜாஎல ; விஸ்தீரணம் : 0.469 ஹெக்டயார்.

**துண்டு இல. 20**

காணியின் பெயர் : மளத்தவ வத்த ; விபரம் : 30-40 வயதான தென்னை மரங்கள் 14 காணப்படுகின்றன ; உரிமை கோருபவர் : திளானி ஜோசப், "த கிரிசான்", பமுனுகம, ஜாஎல ; விஸ்தீரணம் : 0.515 ஹெக்டயார்.

**துண்டு இல. 21**

காணியின் பெயர் : புஎனகாவ ஹேன்யாய ; விபரம் : 30-40 வயதான தென்னை மரங்கள் 68 காணப்படுகின்றன ; உரிமை கோருபவர் : ஹேவா விசென்தி, ஒளுபலியாவ வத்த, வீரபொக்குண ; விஸ்தீரணம் : 0.806 ஹெக்டயார்.

மேற்குறித்த காணிக்கு உரித்துப்பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது முறைப்படி எழுத்தில் அதிகாரம் அளிக்கப்பட்ட காரியக்காரர் மூலமாக 2012 ஆம் வருடம் நவெம்பர் மாதம் 26 ஆந் திகதி மு. ப. 10.00 மணிக்கு பிங்கிரிய பிரதேச செயலகத்தில் என்முன்பாக வெளிப் படுத்தும்படியும் அக்காணியில் அவர்களுக்குள்ள உடந்தைகளின் தன்மையையும் குறித்த காணியை எடுத்தற்கான நஷ்டஈடு பற்றிய அவர்களின் கோரிக்கைகளின் விபரங்களையும், நஷ்டஈட்டுத் தொகையையும், அத்தொகை கணிக்கப்பட்ட விபரங்களையும் 2012 ஆம் வருடம் நவெம்பர் மாதம் 12 ஆந் திகதிக்கு முன்னர் எழுத்தில் இரு பிரதிகளாக எனக்கு அறிவிக்கும்படியும் இத்தால் கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

எம். டீ. சோமரத்ன,
பிரதேச செயலாளர்,
பிங்கிரிய.

பிரதேச செயலகம்,
பிங்கிரிய,
2012.08.14.

09 - 731

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் அச்சிடப்பட்டது.